# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2024 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

[*2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, யூன் மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2024 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டம்

[2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. (கூட்டி.) 2/2021

### தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தம்ம சபையினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

"தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தம்ம சபை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட அதன் குறிக் கோள்களை பயனுற நிறைவேற்றும் மற்றும் எல்லாக் கருமங்களைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் மற்றும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தம்ம சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தம்ம சபையைக் கூட்டிணைத்தல்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போது தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தம்ம சபையில் உறுப்பினர்களாக உள்ளவர்களான அத்துடன் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "தெதிகம ஸ்ரீ மைத்திரி

பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தம்ம சபை'' எனும் பெயர் மகுடத்தின்கீழ் (இதனகத்துப் பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டடிணைக்கப்பட்ட குழுவானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

3. எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது-

(அ) சாந்தியை அடைவதற்காக "பிரதிபதி பூஜா"வை மேற்கொள்வதற்காக பௌத்த நெறியாளர்களை மேம்படுத்துதலும் வழிநடாத்துதலும்;

(ஆ) சீலங்கள், சமாதி மற்றும் பிரக்ஞானம் பற்றி பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்களின் மத அறிவினை விசாலிக்கவும் அபிவிருத்தி செய்யவுமாக பௌத்த மதம் தொடர்பான புத்தகங்களை வெளியிடுதலும்;

(இ) ''தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த தேரரின் கதிகாவத்த'' எனும் நெறியைப் பாதுகாத்தலும் பின்பற்றுதலும்;

(ஈ) புதிதாக துறவறம் மேற்கொண்ட பௌத்த பிக்குகளது அறிவினை விசாலிப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதலும் பௌத்த மதக்கோட்பாடுகள் மற்றும் ஒழுக்கங்கள் குறித்த ஆழமான புரிதல்களைக் கொண்ட மூத்த பிக்குகளின் வழிகாட்டலின் ஊடாக தம்மத்தை போதிப்பதன் மூலம் தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவுடன் இணைந்த பௌத்தர் களை பேணலும்;

(உ) சமத்துவத்தை நிலைநாட்டும் பொருட்டு ஸ்ரீ சம்போதி ஆரண்ய சேனசானத்துடன் இணைந்த பௌத்த பிக்கு களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நான்கு உடைமைகளது உரித்துக்களினை ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவின் ஏனைய பௌத்த பிக்குகளது பயன் பாட்டிற்காக தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவிற்கு வழங்குதலும்;

(ஊ) ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவினது இலக்குகளை எய்தும் பொருட்டு பிக்குகள், பிக்குணிகள், உபசகாக்கள் மற்றும் உபாசிகாக்களின் பயன்பாட்டிற்காக பௌத்தம் சார்ந்த செயற்பாடுகளை வசதிப்படுத்துவதற்கும்;

(எ) தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவின் யாப்புடன் இணங்கி பணிபுரிதல்;

(ஏ) போயா தினங்களில் சில் மற்றும் தியான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலும் பௌத்த கோட்பாடுகளிற்கு முன்னுரிமை அளிப்பதன் ஊடாக ஞானத்தை அடை வதற்காகவும் பாவச்செயல்களிலிருந்து நீங்கியிருப்பதற்கும் பௌத்த மதத்தை பின்பற்றுபவர்களை வழிநடாத்த ஒவ்வொரு கிழமையும் தம்ம கலந்துரையாடல்களை நடாத்துதல்;

(ஐ) வணக்கத்திற்குரிய தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த தேரரின் மத செயற்பாடுகள் தொடர்பில் புத்தகங்கள், காணொளிகள் மற்றும் தம்ம உரைகளைப் பாதுகாப்பதற் கான நடவடிக்கைகளை எடுத்தல் ; அத்துடன்

(ஒ) பௌத்த மதத்தை பின்பற்றுபவர்களும் ஸ்ரீ சம்போதி ஆரண்ய சேனசனவிற்காக அத்தகைய பங்களிப்புகளை அளிப்பதற்கு விரும்புபவர்களும் வசிக்கும் பௌத்த நெறியாளர் குழுக்களது பகுதிகளில் ஸ்ரீ சம்போதி ஆரண்ய சேனசனவை அமைத்தலும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாண சபை முதலியவற்றின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாத திருப்பதனைக் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப்படுத்தல்*

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், ஏற்புடையற்பாலனவான எழுத்திலான சட்டங்களின் கீழ் அவசியமான அங்கீகாரங்களுக்கமையவும், அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின், உள்ளூர் அதிகாரசபையின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், வேறேதேனும் எழுத்திலான சட்டத்திற்கும் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிர்வகித்தலும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைத்துக் குழுவொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள், பந்தி (ஆ) வின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, பந்தி (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள்ளும் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையிலும் முதலாவது குழு நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலச் சபையொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலக் குழு இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாகவிராது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்துக்கானதும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது குழுவின் உறுப்பினர்களது தேர்வுக்கான அல்லது நியமனத்துக்குமான விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், பிரிவு 7 இன் (2) ஆம் மற்றும் (3) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், (2) உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(இ) இடைக்கால குழுவின் ஏதேனும் முடிபானது ஏதேனும் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது குழுவானது, இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரையுஞர்களும் உட்பட, குழுவின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டுகள் எனும் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைஞர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள்நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகுதல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், குழுவானது,

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான செயல்களையும், கருமங்களையும் செய்யவும், புரியவும் மற்றும் நிறைவேற்றவும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது எவரேனும் அலுவலரினூடாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முகவரினூடாகவாயினுஞ்சரி செய்துகொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப் பொறுப்புக்களின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்ளுவதற்கும்:

ஆயின், குழுவானது, கூட்டுத்தாபனத்துக்குச் செய்யப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், கைமாற்றுதல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடுவதற்கும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் அதனையொத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பு அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனம் என்பவற்றை பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும் ஏனைய ஊழியர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவை

களை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்கு செய்தலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல்; அத்துடன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்காக, இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தலும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்*

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மை கொண்டு பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் கருமங்களுக்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள்

விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும்;

(ஆ) குழுவின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் மற்றும் கடமைகளும்;

(ஈ) குழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும் நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) குழுவினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களையொத்த அதே குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைவதற்கும் ஒருங்கிணைவதற்குமான வழிமுறையை ஆளுகின்ற நடவடிக்கை முறையும்; அத்துடன்

(ஏ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதே போன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்கண்ணுள்ள தேதியில் பயனுக்கு வருதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன்பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்துக்கு முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், அதன்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படக்கூடிய அத்தகைய ஏதேனும் விதி பற்றிய அறிவிப்பு தேதி வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தோரால் வேண்டும்.

உறுப்பினர்களின் இடாப்பு

**8**. குழுவானது, உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியம்

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், பிரிவு 6 (இ) இன் ஏற்பாடுகளுக்கு அமைய, குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *கணக்குகளும், கணக்காய்வும்*

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளரொருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்கள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) குழுவானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடனும் 10 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையான கணக்காய்வாளரொருவரினால் சான்றுப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவினது எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய நிரலொன்றுடனும் சேர்த்து புத்தசாசனம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப் பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்குக் கூற்றொன்றும், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செய்யப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கை களும் பற்றிய விபரங்களும் அத்துடன் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளும் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப் படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் செலுத்தப்படற் பாலனவையுமான தனிசுகள்*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன் நேர்முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டு மென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப் பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங் களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்க லாம்*

**13.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தி னதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு அல்லது வேறு ஏதேனும் வகையில் என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாக வரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்ற தாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக் கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

*பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்*

**14.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன்

குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ அல்லது வேறுவகைகளில் எவ்விதமாகவோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக் குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை*

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, குழுவினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான குழுவின் பதவிதாங்குந ரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப் பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்*

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது, ஆனால் கூட்டிணைக்கப் பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் தோதான நிறுவனத் திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவைகள் ஒழுங்கமைப்புக்களின் பதிவாளரின் அங்கீகாரத்துடன், பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர்,

தோதான நிறுவனமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப் பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பொருள் கோடல்

**18**. இச்சட்டம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலன்றி:-

“வங்கி” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று எனப் பொருள்படும்;

“தெதிகம ஸ்ரீ மைத்திரி பிரக்ஞாரத்ன தேரரின் கதிகாவத்தை” என்பது ஸ்ரீ மைத்திரி பிரக்ஞாரத்ன பௌத்த கல்வி தஹம் சபாவுடன் இணைந்தவர்களைப் புத்தபெரு மானின் தம்ம உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டு ஞானம் எனும் அதியுச்ச நிலையை அடைதல் எனும் உச்ச இலக்குடன் ஒழுக்கமான வாழ்வை மேற் கொள்வதற்கு அவர்களை வழிநடாத்துவதற்காக வணக் கத்துக்குரிய ஸ்ரீ மைத்திரி பிரக்ஞார்த்த தேரர் அவர்க ளினால் உபதேசிக்கப்பட்ட கோட்பாடுகளும் ஒழுக்கங் களும் எனப் பொருள்படும்,

“உள்ளூர் அதிகாரசபை” என்பது, மாநகர சபை, நகர சபை அல்லது பிரதேச சபை எனப் பொருள்படுவதுடன் அத்தகைய ஏதேனும் சபையின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறை வேற்றுதலுக்கு நேரொத்த அல்லது சமமான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் அல்லது செயல்படுத்தலுக்காக ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்; எனப் பொருள்படும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக்கொடை, கடன் அல்லது வேறுவகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகளுடன் அல்லது மூலதனத்துடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினாலோ அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது ஏனைய குழு எனப் பொருள்படும்; அத்துடன்

"எழுத்திலான சட்டம்" என்பது, மாகாணசபையினால் ஆக்கப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணைச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் ஏதேனும் சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு அல்லது வழங்குவதற்கு தத்துவம் அல்லது அதிகாரத்தைக் கொண்டுள்ள ஏதேனும் குழுவினால் அல்லது ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்ற ஏதேனும் சட்டம் மற்றும் துணைநிலைச் சட்டம் எனப் பொருள்படும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**19**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*